செ.வெ.எண்.768 நாள் : 28.11.2007

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிக்காலத்தில் மரணமடைந்த பணியாளர்களின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.

*******

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில், குடிநீர் திட்டங்களையும் பாதாள சாக்கடை திட்டங்களையும் விரைவாக செயல்படுத்திட, காலியாக உள்ள பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று **12.04.2007** அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் நடைபெற்ற நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கையின்போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை தொடர்ந்து, அலுவலக பணிகளையும் களப்பணிகளையும் விரைவுபடுத்திட வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து, காலி பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, முதற்கட்டமாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் **86** உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணை **23.7.2007** அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இரண்டாவது கட்டமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விதிமுறைகளின்படி தகுதிவாய்ந்த ஓட்டுநர் உரிமம் பெற்று, கீழ் நிலை பதவிகளில் பணியாற்றி வரும் பணியாளர்கள் **17** நபர்களுக்கு ஓட்டுநர் பணி நியமனமும், உரிய தகுதி உள்ள இளங்களை பட்டம் பெற்று கீழ்நிலை பதவிகளில் பணியாற்றி வரும் பணியாளர்கள் **36** நபர்களுக்கு இளநிலை உதவியாளர்களாக பணி நியமனமும், உதவியாளர்களாக பதவி உயர்வு பெற உரிய தகுதிகள்

பெற்ற இளநிலை உதவியாளர் / தட்டச்சர் **95** நபர்களுக்கும் , **3**ஆம் நிலை சுருக்கெழுத்து தட்டச்சர்கள் **23** நபர்களுக்கு உதவியாளராக பணிமாற்றல் முறை ஆணைகளும் **26.09.2007** அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிக்காலத்தில் மரணமடைந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களில் ஒருவருக்கு கருணை அடிப்படையில் அரசு மற்றும் வாரிய விதிமுறைகளின்படி **33** நபர்களுக்கு கீழ்க்கண்ட பதவிகளில் பணி நியமன ஆணை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் களால் இன்று **(28.11.2007)** வழங்கப்பட்டது. அதில், இளநிலை வரைவு அலுவலர்கள் **10** நபர்களும், இளநிலை உதவியாளர்கள் **8** நபர்களும், தட்டச்சர்கள் **8** நபர்களும், பொருத்துநர்கள் **5** நபர்களும், மின்பணியாளர்கள் **2** நபர்களும் அடங்கும்.

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்களுக்கு **2006 - 2007** ஆம் ஆண்டிற்கான போனஸ் தொகை சுமார் **2.70** கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இதனால் 5,820 பணியாளர்கள் பயனடைந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. ஸ்வரண்சிங், இ.ஆ.ப., வாரிய பொறியியல் இயக்குநர், திரு. ம.துரைராஜ், மற்றும் வாரிய உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.